பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 20 வியாழக்கிழமை (06-11-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 322

முச்சந்தி முரளி



அப்ப குழப்பிறதெண்டு முடிவு எடுத்திட்டினம் போல ...!

# தமிழ் கட்சிகள் எதிர்த்தாலும் இணைப்புக்கு வாக்கெடுப்பு!

## பீரிஸ் நேற்று அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 6

"சர்வஜன வாக்கெடுப்பு இன்றி திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் வடக்குடன் இணைக்கப்பட வேண்டும் என்பது தமிழ்க் கட்சிகளின் வாதமாகும். அவர்களின் வாதத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது."

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சென்னையில் இருந்து வெளியாகும் ஆங்கில தினசரியான ''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கடும் மழை

மட்டக்களப்பு, நவ. 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது.

நேற்றுக் காலையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 113 மி.மீ. மழை பெய்தது.

(இ-21)

## யாழ். விமான டிக்கெட்டுடன் இரத்மலானையில் இருவர் கைது சயனைட்டும் இருந்ததாம்!

கொழும்பு, நவ. 6

இரத்மலானை தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலைய வளவுக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

தொலைபேசி அழைப்புப்பெற வேண்டும் எனக் கூறி உள்ளே நுழைய முயன்ற இவர்களிடம் ''செலூலர்'' தொலைபேசி இருந்தது என்றும் —

சந்தேகம் கொண்ட பாதுகாப்பு அதிகாரி இராணுவத்துக்கு தகவல் கொடுத்தார் என்றும் —

இராணுவம் இவர்களிடம் இருந்த பிரயாணப்பையைச் சோதனையிட்டபோது அதில் 2 சயனைட்டுகள் இருந்தன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் பயணம் செய்த யுவதியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் வந்த ஓட்டோவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் யாழ்ப்பாணம் செல்வதற்கான விமான டிக்கெட் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

(இ-21)

## பிராந்தியங்களின் ஒன்றியம் என்பதை ஏற்க ஐ. தே. க. மறுப்பு

### நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, நவ. 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அரசாங்கம் முன்வைத்துள்ள அரசமைப்பு சீர்திருத்த யோசனையில் ''இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியம்'' என்பதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ஐ. தே. க. தீர்மானித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தும் அரசின் நோக்கம் குறித்து அறிவது என்றும் கூட்டத்தில் முடிவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை நேற்று நடைபெறவில்லை

### கால நிலை சீர்கேடு காரணம்

கொழும்புக்கும் — பலாலிக்கும் இடையேயான 'லயன் எயர்' விமான சேவை நேற்று கால நிலை சீரில்லாத காரணத்தால் நடைபெறவில்லை. இதன் காரணமாக—யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலிக்கு பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்ட பயணிகள் மீண்டும் திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

இன்று விமான சேவை வழமைக்குத் திரும்பும் என்று 'லயன் எயர்' கொழும்பு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-3)

# அரச ஊழியர் சம்பளம் 60 சதவீதம் அதிகரிப்பு!

## ஓய்வூதியர் கொடுப்பனவையும் அதிகரிக்க முடிவு

கொழும்பு, நவ. 6

★ மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அறுபது சதவீத சம்பள அதிகரிப்பு.

★ மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கூடுதலான சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு அடுத்து வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் சம்பள அதிகரிப்பு.

★ ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் ஓய்வூதியக் கொடுப்பனவில் மேலதிகமாக ஐந்து சதவீத அதிகரிப்பு.

நாடாளுமன்றத்தில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை: அரசு-ஐ.தே.க. இணக்கத்துக்கு நோர்வே அரசு உதவவேண்டும்

### டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை.

கொழும்பு, நவ. 6

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை உள்ளடக்கியதான தீர்வு ஒன்றுக்கான இணக்கம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும், ஐ. தே. கவுக்கும் இடையில் உருவாக நோர்வே தமது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்.

இலங்கை வந்துள்ள நோர்வே நாட்டின் முன்னாள் பிரதமர் டாக்டர் திருமதி குறோ காலம் புறூண்லான்ட்டிடம் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

நேற்றிரவு அவரைச் சந்தித்த டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும், பிரச்சினைகள், அரசின் தீர்வு யோசனையில் தமது நிலைப்பாடு ஆகியன தொடர்பாக விளக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பட்ஜெட் என்கின்றனர் பொருளாதார ஆய்வாளர்கள்

லண்டன், நவ. 6

"அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் அதிகாரப்பரவலாக்கல் யோசனை தொடர்பான சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் வகையில் வாக்காளர்களுக்கு தோழமை பாராட்டும் அம்சங்கள் நிறைந்த தேர்தல் பட்ஜட் இது"

மேற்கண்டவாறு பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிப்பதாக பி.பி.ஸி. கருத்து வெளியிட்டது.

அரசின் பதவிக் காலத்தில் பாதிக்கு மேல் கடந்துவிட்ட நிலையில் தமக்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுவருவதன் மூலம் அரசு பொதுத் தேர்தலுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதாகவும் இந்த புதிய வரவு—செலவுத்திட்டம் அமையக் கூடும்.

இந்த வரவு செலவுத்திட்டத்தை ''மக்கள் பட்ஜட்'' என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளமை மக்களைக் கவர்வதற்கே. இப்படி பி.பி.ஸி. கருத்து வெளியிட்டது. (இ-3)

## மலேஷிய தூதுவராக லயனல்

கொழும்பு, நவ. 6

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் லயனல் பெர்னாண்டோ மலேஷியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெறவிருக்கின்றார்.

இவரது பெயர் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ-21)

## வரப்பிரகாஷ் மரணம் அறிக்கை உபவேந்தரிடம்

கண்டி, நவ. 6

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் செ. வரப்பிரகாஷின் மரணம் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் தலைமையிலான குழுவின் அறிக்கை நேற்று உபவேந்தர் வெஸ்லி குணவர்த்தனாவிடம் கையளிக்கப்பட்டது.

இன்று சகல பீடாதிபதிகளையும் உள்ளடக்கிய உயர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 11 — 02 — 1935

காலனின் பிடியில்: 17 — 10 — 1996

## அமரர் செல்லத்துரை யோகராசா

(இளைப்பாறிய சிறைச்சாலை தலைமை ஓவசியர்)

யாழ்ப்பாணம் இல. 17, பேரின்பநாயகம் ஒழுங்கையில் வசித்து இடம்பெயர்ந்து 1996 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி வாகனவிபத்தில் வன்னியில் அகால மரணத்தை அடைந்த செல்லத்துரை யோகராசாவின் முதலாவது ஆண்டு நிறைவை இன்று ஆற்றொணாத்துயரத்துடன் நினைவு கூருகின்றோம்.

பல்லாண்டு பறந்தாலும் பாசம் பற்றுப் பிரிந்திடுமோ? அஞ்சா நெஞ்சமும் உடல் வலி விந்தைகள் புரியும் வீரத்தோற்றத்தை மறக்க முடியுமோ? சிறைச்சாலை திணைக்களத்தில் தலைமை ஓவசியராகப் பணியாற்றிய உங்கள் கம்பீரத் தோற்றத்தைக் கண் முன் நிறுத்துகின்றோம்.

அன்பும் அறனும் திறனும் நிறைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது குல தெய்வமாம் வைரவக் கடவுளை மனமார இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்'' (குறள்)

மனைவி, மக்கள், சகோதரசகோதரிகள்,
சிறியதகப்பன், மைத்துனர், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

செ. சண்முகராசா
96, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அன்னாரது மறைவின் முதலாவது ஆண்டு நிறைவை நினைவு கொள்ளும் முகமாக இன்று கச்சேரி கிழக்கு, சடுக்காயடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் நண்பகல் மகேஸ்வர பூசை நடைபெறும்.

(சி/1977)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்

**திரு. ஆ. சிவபாலனின் தாயார்**

**ஆறுமுகம் வள்ளியம்மை**

சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்

**யாழ். (வெஸ்கோ) மருந்தகம்.**

(சி/1975)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி

**சங்கரிஅம்மா இரத்தினசபாபதிக் குருக்கள்**

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் [முடிப் பிள்ளையார்] ஆலயத்தில் நீண்டகாலமாக பிரதம குருவாகச் சேவையாற்றிவரும்

**சிவஸ்ரீ இ. சோமாஸ்கந்தக் குருக்கள்**

அவர்களின் அன்புத் தாயார் திருமதி சங்கரிஅம்மா இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்!

பரிபாலன சபையினர்,

**பெரியபுலம்**

**மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்.**

வேலணை மேற்கு, வேலணை. [51000]

## பற்சிகிச்சை முகாம்

நெல்லியடி, நவ. 6

வடமராட்சி லயன் கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி லியோ கழகம் நடத்தும் பற்சிகிச்சை முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெறும்.

மந்திகை மருத்துவமனை பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. மதியழகன், உதவி வைத்திய அதிகாரி எஸ். திருச்செல்வநாயகம், மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் இதில் கலந்துகொள்வார்கள்.

(இ-109)

## பனம் விதை நடுகை

வடமராட்சி பனைமரக் காலை உரிமையாளர், தொழிலாளர் சங்க ஆதரவில் புலோலி வட கிழக்குப் பகுதியில் சுமார் 500 பனம் விதைகள் முதற்கட்டமாக நடப்பட்டன.

சந்தா தோட்டத்திலுள்ள இலக்கணாவத்தை என்னும் இடத்திலேயே பனம் விதைகள் நடப்பட்டன.

புலோலி வடகிழக்கு கிராம சேவை அலுவலர் இ. புலேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இவ் வைபவத்தில் புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஆ. மகேசன் உட்பட சன சமூக நிலைய நிர்வாகிகளும், வடமராட்சி பனை மரக்காலை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(இ-109)

## சாரதிகளுக்கு சேவைக்காலப் பயிற்சி

வடமராட்சி, நவ. 6

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சாரதிகளுக்கு சேவைக்கால சாரதிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு புதிய ரக பஸ்கள் வந்துசேர்ந்துள்ளதால் அவற்றைக் கவனமாக ஓட்டுவதற்கு உதவியாக சேவைக்கால சாரதிப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிக்கென வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஒரு பஸ்ஸைப் பயன்படுத்தி வருகிறது.

(இ-173)

## நூல் வெளியீடு

நெல்லியடி நவ. 6

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் அனுசரணையில், மா. லோகசிங்கம் எழுதிய ''இலங்கைப் பொருளாதாரம்'' என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த 31 ஆம் திகதி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மண்டபத்தில் கி. நடராஜா தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் ப. சிவநாதன் பிரதம விருந்தினராகவும், கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்

[ஐ-109]

# கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் பொருளாளர்

**திரு. ஆ. சிவபாலனின்**

தாயார்

**ஆறுமுகம் வள்ளியம்மை**

சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

**வடபிராந்திய**

**யாழ். ஆங்கில மருந்து வணிகமன்றம்.**

(சி/1976)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை (செல்லமணி) அவர்கள் 5-11-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்ற திருமதி காசிலிங்கம் நல்லம்மாவின் அருமைச் சகோதரியும், இராஜேஸ்வரி, சிவபாலன் (உரிமையாளர், ஆதித்தா மருந்தகம்), சிவச்சந்திரன் [B.Sc, ICMA,(U.K.)], சிவரஞ்சன்( M Sc U K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமநாதன் (முகாமையாளர், புகையிரதப்பகுதி), கனகேஸ்வரி(ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), கலாநிதி (சட்டத்தரணி - U. K.), பத்மாவதி (U.K.) ஆகியோரின் அருமை மாமியாரும், திருமதி ராதிகா பேரின்பநாயகம், அச்சுதராஜா, செந்தூர்க்குமரன், ரவிசங்கர், சோபிதா, சிந்துஜா, பிரதீபா, வாசுஜா ஆகியோரின் பேர்த்தியும், நரேஷ்காந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06-11-97) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:

22/2, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

சிவபாலன் (மகன்)
(உரிமையாளர்,
ஆதித்தா மருந்தகம்)

[51004]

## சின்னப்பு சின்னத்தம்பி

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த சின்னப்பு சின்னத்தம்பி 5-11-97 இல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் கணவரும், லோகநாயகி, சிவஞானமூர்த்தி, பத்மநாயகி, சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), நடேசமூர்த்தி (இலங்கை வங்கி மாவட்ட காரியாலயம்), திவாகரமூர்த்தி, வசந்தநாயகி, பாஸ்கரமூர்த்தி (பிரான்ஸ்), ஜெயநாயகி, கிருஸ்ணநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-11-97) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. நடேசமூர்த்தி
(மகன்)

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு,
அச்சுவேலி.

(51003)

## முருகர் கந்தையா

மாவிட்டபுரம் மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கு வட்டுக்கோட்டை செட்டியார் மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் கந்தையா 5-11-97 அன்று (புதன்கிழமை) சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் கணவரும், பவளம் (கிளிநொச்சி), இராசரத்தினம்( அராலி) காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் தந்தையும் செல்லத்துரை (கிளிநொச்சி), செல்வநாயகி (அராலி), ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-11-97 (வியாழக்கிழமை) நண்பகல் 12.30 (புதிய நேரம்) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி வடக்கு மடத்தடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

க. இராசரத்தினம்
(மகன்)
(செல்வா சிகையலங்கார நிலையம், சங்கானை).

அராலி வடக்கு,
செட்டியார் மடம்.
வட்டுக்கோட்டை,

# வடலிக் கூத்தர்களுக்குப் பாராட்டு

**யாழ். திருமறைக் கலாமன்ற ''வடலிக்கூத்தர்''**

கலைக்குழுவினர்

தென் இலங்கை, மலையகம் மற்றும் ஜேர்மனி, பிரான்ஸ், ஹொலண்ட், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் எமது பாரம்பரிய கலைவடிவங்களாகிய நாட்டுக்கூத்து, இசைநாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளை நடத்தி வெற்றிகரமாக நாடு திரும்பியதைப் பாராட்டுகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

**- கலைப்பிரியர்கள்**

நன்றி. ஆ. குணரத்தினம்
180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெலிகளின் உதவியுடன்
# வீரப்பனை தேடும் வேட்டை ஆரம்பம்!

புதுடில்லி, நவ.6

சந்தனமரக் கடத்தற்காரன் வீரப்பனைக் கைது செய்வதற்கு கர்நாடக மற்றும் தமிழக அதிரடிப்படையினர் காட்டுப்பகுதிக்குள் தங்களின் கூட்டு நடவடிக்கையைத்தொடங்கி விட்டதாக பெங்களூரில் உயர் அரச அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி.ரி.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இருமாநில அதிரடிப்படைகளுக்கும் கூட்டுத் தலைமை நியமிக்கப்பட்ட மறுநாளான நேற்று முன்தினம் இந்தத்தேடுதல் வேட்டை தொடங்கப்பட்டதாக அந்தச்செய்தி மேலும் தெரிவித்தது.

அதிரடிப் படைகளின் கூட்டு நடவடிக்கைக்கு உதவியாக ஹெலிக்கொப்ரர்களும் விரைவில் பயன்படுத்தப்படும் என்றும் அந்தச் செய்திவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-5)

## காபூல் நகர வீதிகளில் தலைமுடி பரிசோதனை

காபூல், நவ. 5

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தெருவில் போகும் ஆண்களை நிறுத்தும் தலிபான் பொலிஸார், அவர்களின் தலைமுடி இஸ்லாமிய சட்டத்திற்கு அமைய இருக்கிறதா என சோதனையிட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான்களின் மதப்பிரிவு பொலீஸார் இதற்காக தெருக்களில் சோதனைச் சாவடிகளை அமைத்து போவோர் வருவோரைச் சோதனையிட்டு வருவதாகக்கூறப்படுகின்றது.

தலைமுடி சற்று நீளமாக இருந்தால் இந்தச் சோதனைச் சாவடிகளில் வைத்தே கத்தரித்து விடப்படுகின்றது.

முஸ்லீமாகப் பிறந்த ஒருவன் தலைமுடி குனிந்து தொழுகை நடத்தும்போது மண்ணை முட்டக் கூடாது என்பது இஸ்லாமியச் சட்டம் என்று தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காபூல் நகரை கடந்த ஒரு, வருடமாகக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள தலிபான்கள் மிகவும் கடுமையான ஒழுக்க விதிகளை ஆண்கள் மீதும், பெண்கள் மீதும் நடைமுறைப்படுத்தி வருவது தெரிந்ததே. (ஐ -5)

# அமெரிக்கர்களை வெளியேற்றும் காலக்கெடுவை ஈராக் நீடித்தது!

பக்தாத், நவ. 6

ஐ. நா. ஆயுத பரிசோதனைக் குழுவில் இருந்து அமெரிக்கர்களை வெளியேற்றுவதற்கு விதித்திருந்தகாலக்கெடுவை ஈராக் நீடித்துள்ளது.

இந்த விவகாரத்தை ஐ. நா. பாதுகாப்புச் சபை விவாதித்து முடிக்கும்வரை காலக்கெடு தாமதிக்கப்படும் என்று ஈராக்கின் அதிகாரபூர்வ செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

இக்காலக்கெடு முடிவடையும் வரை ஆயுத பரிசோதனைக் குழுவில் இடம்பெறும் அமெரிக்கர்கள் ஈராக்கில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே ஈராக் இந்த காலக்கெடுவை நீடிக்க இணங்கி

### பதற்றத்தைத் தணிக்க முயற்சி

யுள்ளது.

ஈராக்கின் இந்த நல்லெண்ண முடிவை அடுத்து அதற்கான பதில் நடவடிக்கையாக ஐ. நா. ஆயுத பரிசோதனைக் குழுவின் சார்பில் அமெரிக்க வேவு விமானங்கள் ஈராக் மீது பறப்பதை ஒரு வாரகாலம் நிறுத்தி வைக்க பாதுகாப்புச்சபை இணங்கியுள்ளது. (ஐ)

## வங்கக்கடலில் தாழமுக்கம்

சென்னை, நவ.6

வடதமிழ் நாட்டின் கரைக்கு அப்பாலும், தென் ஆந்திராவின் கரைக்கு அப்பாலும் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகத் தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மாணவர்கள் ஜேர்மன் செல்ல கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்
### அந்நாட்டு அமைச்சர் தகவல்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த திறமைசாலியான மாணவர்கள் ஜேர்மன் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு வசதியாக ஜேர்மன் அரசாங்கம் குடிவரவுச் சட்டங்களைத் தளர்த்தவிருக்கிறது என்று அந்த நாட்டு அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாட்டு மாணவர்களைக் கூடுதலாக வரவேற்கத்தக்கதாக தங்கள் நாட்டு சட்டங்களை மாற்றியமைத்தால் மாத்திரமே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இருந்து ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் மூளைசாலிகள் செல்வதைத் தடுக்க முடியும் என்று ஜேர்மன் அபிவிருத்தி உதவித்துறை அமைச்சர் கார்ல் டியேற்றர் ஸ்பிராங்கர் கூறியுள்ளார்.

கோலோன் நகரில் வெளியாகும் 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், தற்போதுள்ள சட்டத்தின் படி வெளிநாட்டு மாணவர்கள் ஜேர்மனியில் கல்வி கற்கும் காலம் முழுவதற்கும் அவர்களுக்கு நிதி வசதி அளிப்பதற்கான ஒருவரது சிபார்சை ஜேர்மனியில் இருந்து பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

புதிய சட்டத்தின்படி ஒரு வருட காலத்துக்கு மாணவருக்கு நிதி வசதி அளிக்க ஒருவர் சிபார்சு தெரிவித்தால் போதும்.

அரசாங்கத்திற்கு மேலதிக செலவினம் ஏற்படாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாணவர் அவரினது குடும்பத்தினரையும் ஜேர்மனிக்கு அழைத்துவர முடியும்.

ஜேர்மனியில் கடுமையான குடிவரவுச் சட்டங்கள் அமுல் செய்யப்பட்டதால் அண்மைக் காலத்தில் வெளிநாட்டு மாணவர்களின் வரவு கடும் வீழ்ச்சியடைந்திருந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ 9)


## ஓமந்தை



# அருள்மிகு ஸ்ரீ மருதோடைக் கந்தசுவாமி கோயில் முழுப் புனருத்தாரண திருப்பணி அறிவித்தல்

## 'உருவான கதை சொல்வேன் கேளீர்'

ராகம்: கானடா தாளம்: ஆதி

பல்லவி

உருவான கதை சொல்வேன் கேளீர் - மருதோடை
குருவான வடிவேலன் கோயில் கொண்டே அருளி

அனுபல்லவி

திருவாழும் ஓமந்தை தீம் மருதோடையிலே
பெருமானாம் வடிவேலன் பெருந்தலத்திருக்கோயில்

சரணம்

கமழ் ஆறுமுகவேலர் கதிர்காமம் சென்றொருவேல்
புகழ் போற்றும் பக்தியுடன் புனிதமாய்க் கொண்டு வந்தார்
மகிழ்வோடு ஆலநிழல் மாண்புற வைத்தயர்ந்தார்
திகழ் வேலன் கனவினில் மருதோடை அமர்வேனென்றான்

— இயலிசை வாரிதி பிரமஸ்ரீ மா. த. க. வீரமணி ஐயர்.

புனருத்தாரண திருப்பணி நிதிக்கான

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

இடம்: நல்லூர் சிவன் கோயில்
நாள்: 15-11-1997
நேரம்: மாலை 5.30

அன்பளிப்பு ரூபா 50 (ஐம்பது) (அரச அனுமதி பெற்றது)
மெய்யடியார்கள் யாவரும் ஆதரவு நல்குக.

### பரிசில்கள்

1. மோட்டார் சைக்கிள் M. D. 90
2. மோட்டார் சைக்கிள் YAMAHA M, 50
3. 40,000 ரூபா பெறுமதியான மாணிக்கக்கல் பதித்த அட்டியல் அல்லது சாளி மோட்டார் சைக்கிள்
4. 10 தெரிவு செய்யப்பட்ட ஆறுதற் பரிசுகளும் உண்டு. (பெற்றோமாக்ஸ், சுவர்மணிக்கூடுகள், றேடியோக்கள்)

''கல்விலே கடவுள் உண்டு என்பதைக்
கல்லடா கல்லடா கல்''

கல்லிலே கலைவண்ணம் கண்ட நம்பெருமான் முழு நிறைவான கருங்கல் திருப்பணியை காலமும் நேரமும் சூழ் நிலையும் உணரப் பெற்று வவுனியா நகரில் வைத்து கற்பொழிவு வேலைகளைத் தொடங்கி வடிவேலவன் எம் மருவேலன் இருப்பிடத்திற்கு எடுத்துச் சென்று வடிவமைக்க திருவருள் பாலிப்பானாக.

## அருளாசிச் செய்தி

முருகன் அடியார்களே!

எமது ஓமந்தைப்பகுதியிலே எழுந்தருளி அருளாட்சி புரியும் வேலவனின் ஆலயம் வன்செயல் காரணமாக சிதைவடைந்த நிலையில் இருக்கின்றது. இவ்வாலயத்தை முழு அளவிலான புனருத்தாரண கருங்கற் திருப்பணியாக நிறைவேற்ற திருவருள் பாலித்துள்ளது. இவ்வரிய ஆலலயத்திற்கு சற்று முன்னைய காலமொன்றில் எனது குரு ஸ்ரீலஸ்ரீஸ்வாமிநாத பரமாச்சாரிய ஸ்வாமிகளுடன் சென்றுள்ளேன். தென்பகுதித் தலங்களுக்கு பிரசங்கம் செய்ய சென்ற போதெல்லாம் தங்கி தரிசித்து ஆறிச் சென்றும் உள்ளோம். அந்நாள் இதை எழுதும் போதும் பசுமையாக நிழலாடுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்த இவ்வாலயத்தைப் புதுப்பிக்கும் கருங்கற் திருப்பணியில் தங்களையும் இணைத்துக் கொள்ள வாய்ப்பும், திருவருளும் கிட்டியுள்ளது. வன்னி வாழ் சைவ மக்களுக்கு அருள்புரியும் இவ்வாலயத்தை தங்கள் தாராள குணத்தினால் அறுமுகச் செவ்வேள் புதுப்பொலிவு பெற வாழ்த்துகின்றேன்.

மெய்யடியார்களே!

''ஈதல் அறமென'' மனதிற் கொண்டு இப்புனித திருப்பணிக்கு அள்ளி வழங்க வேண்டும். கோயிற் திருப்பணி நிறைவுறவும் தங்கள் வாழ்வும் வளமும் சிறக்கவும் மீண்டும் திருமுருகனின் திருவடிகளைச் சிந்தித்து அருள்பெற அடியேன் நல்லாசிகள்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய ஸ்வாமிகள்

வாழ்க இலங்கை மருதோடை மாமயிலோன்
வாழ்க அடியார் வளம் பெற்று — வாழ்கவே
அந்தமிலாச் சைவநெறி ஆரணமும் ஆகமமும்
சந்ததமும் வாழ்க தழைத்து

— அன்பன் திருமுருக கிருபானந்தவாரியார்

ஸ்ரீ மருதோடைக்
கந்தசுவாமி தேவஸ்தானம்.

★ இந் நற்பணியில்...

சுன்னாகம் இன்[illegible] கழகம்
ஜெயா பார்மசி நல்லூர்.
யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை
ஐயர் கடை கந்தர்மடம்
ஸ்ரீ வள்ளிக்குமரன் பல்பொருள் வாணிபம் நல்லூர்!

(50999)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும்
# பதிவு செய்தல் - 1998

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1997 மார்கழி 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

01. எழுதுப் பொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் — மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்ரீல் அலுமாரி, கபினட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகல வகையான ஹார்ட்வெயர் பெயின்டுகள், வாணிஸ்.
07. இயந்திர கருவிகளும், உதிரிப் பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகளும், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருள்களும் கண்ணாடிப் பொருள்களும்
12. மரம்
13. கட்டடப் பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன)
15. டயர்கள், ரியூப்புக்கள், பற்றிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகள்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்புச் சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துகள் முதலியன
22. பைப்புகள், பைப் இணைப்புகள்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புகள்

### சேவைகள்

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. ஸ்ரீல் தளபாடங்களும் திருத்த வேலைகளும்
05. மரத்தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகள் தைத்தல்
08. பெயர்ப் பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயரிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/ திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்/ கேற்றுகள் உருவமைத்தல்/ பொருத்துதல்
07. கட்டடங்கள்/ கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றிற்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/ பொருத்துதல்
09. எந்திரவியல் சார்படம் வரைதலும், நீலப்பிரதி பண்ணலும்
10. கறையான்/ பீடைகள் ஒழிப்பு வேலைகள்

கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள்/ சேவைகள் — 1998 எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. எந்திரவியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த. பெ. இல. 57, யாழ்ப்பாணம் திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/ சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக 150 ரூபா பெறுமதியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்களை கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்களை சேவை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்
8. ICTAD பதிவு இலக்கம்/ புத்தக இலக்கம் (எந்திரவியல் சேவை இல. 3 இற்கு மட்டும்)

குறிப்பு:

எந்திரவியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

அ) ICTAD தரப்படுதலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி/ அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி/ வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம் மாவட்டத்தில் உள்ள தமது கிளை/ பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (எந்திரவியல் சேவைகள் இல. 7 இற்கு மட்டும்) தருக.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(ஐ/1964)

# பால் உற்பத்தியை ஊக்குவிக்க
# வெளிநாட்டு நிறுவனங்கள் உதவி

வலிகாமம் தெற்கு, நவ 6 யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு வேண்டிய பால், மற்றும் பாலுடன் சம்பந்தப்பட்ட பாற்பொருள்கள் ஆகியவற்றினை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாலும், பால்சார்ந்த பொருள்களும் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தமது அங்கத்தவர்களை அபிவிருத்திப் பணியில் ஊக்கமுடன் செயற்பட வைக்கும் நோக்குடன் கடன் திட்டமொன்றையும் அவர்கள் ஆரம்பிக்க உள்ளனர்.

ஆடை நீக்கிய பால் உற்பத்தி, யோக்கட் உற்பத்தி, சுத்திசரிக்கப்பட்ட பாலுற்பத்தி போன்ற பல்வேறு பாற்பொருள்களையும் உற்பத்தி செய்வதற்கு 11 லட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகவும், இதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி உதவி கிடைத்துள்ளதாகவும் சங்கத்துடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''யுனிசெவ்'' நிறுவனம் இத்திட்டத்துக்கென 4 லட்சத்து 95 ஆயிரத்து 800 ரூபாவை வழங்கியுள்ளது.

மேற்படி திட்டங்களின் முதற்கட்டமாக ஆடைநீக்கிய பால் உற்பத்தி விநியோகத்தை சங்கம் ஏற்கனவே ஆரம்பித்து நடத்தி வருகின்றது,

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள சங்கத்தின் கிளை நிலையத்தினூடாக தற்போது ஆடை நீக்கிய பால் விநியோகம் நடைபெறுவதாகவும், சங்கத்தின் ஏனைய கிளைகளுக்கும் இத்திட்டம் விரைவில் விஸ்தரிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

யோக்கட் உற்பத்தி, பாற்சுத்திகரிப்பு ஆகியவற்றுக்குத் தேவையான இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் இன்னமும் கொழும்பில் இருந்து வந்து சேரவில்லை எனவும் அவை வந்து சேர்ந்தவுடன் அவ்வுற்பத்திகளும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

மேற்படி திட்டத்தின் மூலம் திரட்டப்படும் பணத்தில் மாதம் தோறும் 15 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-152)

## கண்ணீர் அஞ்சலி

பிராமண இளைஞர் சமாஜத்தின் தலைவர்
**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்களின்**
தாயார்
**திருமதி**
**இரத்தினசபாபதிக் குருக்கள் சங்கரி அம்மா**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும், அன்னாருக்கு எமது இதய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராமண இளைஞர் சமாஜம்

(50997)

## யுனெஸ்கோ கண்காட்சி

யாழ். கல்வி வலயம் ஒன்றின் ''யுனெஸ்கோ'' பிரிவினரின் சித்திரக் கண்காட்சி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

அண்மையில் நடத்தப்பட்ட சித்திரம், கேலிச்சித்திரம், சுவரொட்டி ஆகிய போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களின் ஆக்கங்கள் இக்கண்காட்சியில் இடம் பெறவுள்ளன. யுனெஸ்கோ நிறுவனம் தொடர்பான விவரண விளக்கமும் கண்காட்சியில் அடங்கும். (ஐ)

## அதிபர் நியமனம்

அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியால அதிபராகக் கடமையாற்றிய கோ. குகனேசன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்திற்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் அனலைதீவில் 15 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. (ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் குட்டிப் புயல்!

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை பலத்த புயல் காற்று வீசியது. பிற்பகல் 3 மணிமுதல் 5-30 மணிவரை வீசிய பலத்த காற்றினால் பயன்தரு மரங்கள் பல முறிந்துநாசமாகின.

வீதியோரங்களில் உள்ள பனை தென்னை மரங்களில் இருந்து ஓலைகளும், மட்டைகளும் அடித்துச் செல்லப் பட்டு வீதிகளில் பரவிக் காணப்பட்டன. (ஐ-117)

## நியமனம்

தென்மராட்சி நவ. 6

சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் ஐ. வைரமுத்து ஓய்வு பெற்றுச் சென்றதை யடுத்து சரசாலை உப அலுவலக பொறுப்பதிகாரி து. அருணந்தி புதிய செயலாளராக வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால நியமிக் கப்பட்டுள்ளார். (ஐ-117)

## தாச்சிப் போட்டி

அச்சுவேலி நவ. 6

கோப்பாய்க் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே தாச்சிப் போட்டி நடத்தப் பட்டு வருகிறது.

11 வயது, 13வயதுஎன இரு வயதுப் பிரிவுகளாக போட்டி நடைபெறுகின்றது.

அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் ஆகிய பிரிவுகளில் உள்ள பாடசாலை மட்டத்தில் நடைபெறும் போட்டியில் தெரிவு செய்யப்படும் பாடசாலைஅணிகள் கோட்ட மட்டப் போட்டியில் கலந்து கொள்ளும். (ஐ-11)

# உரும்பிராய்ப் பகுதியில் பல ஒழுங்கைகளில் வெள்ளம்

உரும்பிராய், நவ. 6

உரும்பிராய்ப் பகுதியிலுள்ள பல ஒழுங்கைகளில் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் நீர் தேங்கி உள்ளது.

முக்கியமாக இந்துக் கல்லூரி ஒழுங்கை, கற்பகப்பிள்ளையார் கோயில் ஒழுங்கை ஆகியனவே மிக மோசமாக உள்ளன. சில இடங்களில் பள்ளம் காரணமாக நீர் நிறைந்துள்ளது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இவை செப்பனிடப் படாமையே இதற்குக்காரண மாகும்.

பாதசாரிகளும் மி வண்டியில் பயணஞ் செய்வோரும் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (ஐ-154)

# மும்மலங்களை நீக்குவதற்காக போர் நடத்தினான் முருகன்!

**கந்தசஷ்டி விரதத்தின் ஆறாவது நாளான இன்று, முருகன் ஆலயங்களில்சூரன் போர் நடைபெறும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

அவுணரை அழித்து அமரரைக் காக்கவென்றே வந்தவன் அறுமுகன். சூரன், சிங்கன், தாரகன் முதலானோரை அழித்து அவர்தம் ஆணவத்தை அடக்கி ஆழ்வதில் வெற்றி கண்டவன் முருகன். சூரன் போரில் நாம் அறிய வேண்டிய உண்மைகள் பல உண்டு.

நம் ஒவ்வொருவருடைய உள்ளமும் போர்க்களம். இந்தப் போர்க்களத்தில் சூரனுக்கும் முருகனுக்கும் போர் நடைபெறுகின்றது. சூரன் - ஆணவமலம்; சிங்கமுகாசுரன் - கன்மமலம்; தாரகாசுரன் - மாயாமலம். இப்பூவுலகில் ஆன்மாக்களை மும்மலங்களும் துன்புறுத்துகின்றன. துன்புற்ற ஆன்மாக்கள் இறைவனை வேண்ட ஒளிமயமான, அறிவுமயமான, இன்பமயமான ஆறுமுகப் பெருமான் ஆன்மாக்களின் துன்பதுயரத்தை நீக்கி இன்ப வாழ்வு அளிக்கின்றான்.

மாறுபடுசூரன் என்கிறார் அருணகிரியார். வேளைக்கு வேளை, கணத்துக்குக் கணம் வேறுபட்டு நிற்கும் மாயத் தன்மையை உடையவர்கள் அசுரர்கள். ஆனால் மாறுபட்டும், வேறுபட்டும் ஒருருவாய் நின்று உண்மையொளியாய் காட்சி தருபவன் முருகன். ஒளிக்கு முன்னே இருள் ஓடிப்போக வேண்டியது தானே. அதனால்தான் இருளையய்நின்ற அவுணரை அடக்கி ஒளியாய் நின்று திருவருள் புரிகின்றான் கந்தன்.

சூரபன்மனும் சுப்ரமண்யனும்போர்க்களத்திலே சந்திக்கின்றார்கள். அருளுக்கும் இருளுக்கும், கருணைக்கும் கொடுமைக்கும், அறிவுக்கும் மருளுக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்பு இது.

''முண்டக மலர்ந்ததன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிறையுஞ் செம்பொன் மவுலியங் கோலமார்பும்
எண்டரு கரமீராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந் தெரியக்
கண்டான்''

தாமரை மலர்ந்தது போன்ற தண்ணென்று குளிரும் ஆறுமுகங்களைக் கண்டான் சூரன். பன்னிரண்டு செவிகளிலும் குண்டலங்கள் மிளிர்ந்தன. அழகான திருமார்பையுங் கண்டான். இனிய மழலை வதனங்களையும் கண்டான். முருகப்பெருமானின் பேரழகை முடியிலிருந்து அடிவரை கண்டான்.

சூரபன்மன் உண்மையிலேயே கொடுத்து வைத்தவன். ஆறுமுகனின் திருப் பெருவடிவங்காணும் பாக்கியம் பெற்றான். ''அவனருளாலே அவன்றாள் வணங்கி'' என்பது போல ஒரு கணப் பொழுது ஆணவ முனைப்பு நீங்கி ஆண்டவன் நினைப்பு வந்தது. அடுத்த கணமே ஞானம் மறைந்துவிட்டது. ஆணவ இருள் கண்ணை மறைத்தது கோலமாமஞ்ஞை தன்னிற் குலவிய குமரன தன்னைப் பாலன் என்று எண்ணிய சூரன், ''இந்தப் பால்மணம் மாறாப் பச்சிளம் பாலகனுக்கு நான் தோற்றுப் போவதா? கூடாது. எப்படியும் வென்றே தீருவேன்'' என்று கங்கணங் கட்டிக் கொண்டு மாயாஜால வித்தைகளைக் காட்டிப் போர் செய்தான். இறுதியில் மாமரமாய் வந்தான் முருகன் அவனது மாயவடிவங்களைப் பொடிப் பொடியாக்கினான். போர் உச்சக்கட்டத்தை அடைந்தது.

சூரபன்மனை முருகன் தன்னுடைய வேற்படையால் கொன்று ஒழித்தான். அழியா வரம்பெற்ற சூரன் சேவலும் மயிலுமாகினான். சேவல் கொடியாகவும் மயில் வாகனமாகவும் மாறின.

பகைவனுக்கும் அருளுந் தன்மையுடைய முருகப் பெருமான் சூரபன்மனுக்கும் அருள்புரிந்தான். அதனால் அரும்பேறு பெற்ற சூரனின் பெருமை சொல்லுந் தரமன்று. ★

இராசையா ஸ்ரீதரன்


# புதுக்கடைத் திறப்பு விழா

இன்று முதல் யாழ். நகரில்

## ராஜ்வரன் அன் கோ

(இரும்புப் பொருள்கள் விற்பனையகம்)

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் ஐப்பசி மாதம் 21 ஆம் நாள் (06 - 11 - 1997) வியாழக்கிழமை பகல் 10-52 முதல் 12-04 வரையுள்ள சுபவேளையில் கோலாகலமான ஆரம்பம்.

இரும்புப் பொருள்கள், கட்டடப் பொருள்கள் விற்பனையில் அனுபவம் வாய்ந்தவர்களின் நிறுவனம் நினைவிருக்கட்டும்!



## ராஜ்வரன் அன் கோ
(RAJWARAN & CO.)

325, காங்கேசன்துறை வீதி,
(முட்டாசுக் கடைச்சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.

அன்புடன் நல்வரவை நாடும்
ச. தியாகேஸ்வரன், இ. ஜெயராஜ்
நிறுவனப் பங்காளர்கள்.

(50985)


**ராகிங் கொலைக்கொடுமை; யாழ்ப்பாணத்து உணர்வலை**

# மாணவனது, தந்தையின் உயிர் குடித்த பகிடிவதை!

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சி. மகிளடியானின் தகவலும் கருத்தும் இவை:

கடந்த சில நாள்களாக, பேராதனைப் பல்கலைக் கழக ''ராகிங்'' (பகிடிவதை) சம்பவத்திற்கு முக்கிய இடம் கொடுத்து ஆசிரியர் தலையங்கத்திலும் குறிப்பிட்டிருந்தீர்கள். பாராட்டுக்குரியது.

வருங்காலத்தில் இக் கேவலமான மிலேச்சத்தனம் இடம் பெறாதிருக்க, உதயனின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது சர்வாதிகாரி ஹிட்லர், ஒருநாள் படைஅணி ஒன்றின் மேலதிகாரிக்கு, எட்டு இராணுவ வீரர்களின் பெயரைக் கொடுத்து மறுநாள காலை அவர்களைச் சுட்டு விடும்படி கட்டளையிட்டான். அவர்கள் எதிரிப் படையினருக்கு உளவு கொடுத்தார்கள் என்பதே குற்றச்சாட்டாகும். மேலதிகாரி இரவோடிரவாக விசாரணை நடத்தி அவர்கள் எதுவித குற்றமோ எதிரிப்படைக்கு உளவோ கொடுக்கவில்லை என்பதை அறிந்து கொண்டார். உடனே ஹிட்லருக்கு தனது விசாரணை பற்றித் தெரிவித்து கொடுத்த கட்டளையை மேற்கொள்ளாதிருக்க அனுமதியும் கேட்டார்.

ஆனால் ஹிட்லர் தான் இட்டகட்டளைப்படி ''உளவு கூறிய குற்றத்திற்காக'' மறுநாள் காலை இராணுவ அணியில் வைத்து சுட்டு விடும்படி உத்தரவிட்டார். அதன் பிரகாரம் மறு நாள் காலை எட்டு இராணுவ வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பின்னர் ஹிட்லர் மேலதிகாரியைக் கூப்பிட்டு பின் வருமாறு கூறினார்:

உமது விசாரணை திருப்திகரமானதே. எட்டு இராணுவ வீரர்களும் எதுவித தகவலும் எதிரிப்படைக்கு கொடுக்கவில்லை. ஆனால் இப்படி ஒரு குற்றம் படை அணியில் என்றுமே நடைபெறாதிருக்க இது மற்றவர்களுக்கு ஒரு பாடம், (This is only a lesson to others).

தாமாகத் திருந்தாதவர்களுக்கு, மற்றவர்களுக்குக் கொடுமை செய்பவர்களுக்கு தண்டனை வழங்கினால் தான் ஏனையோரும் திருந்துவார்கள்.

'ராகிங்' கொடுமை இப்போது தான் உண்டானது என்பதல்ல, யாழ். பல்கலைககழகம் உட்பட இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ''ராகிங்'' கடந்த பல வருடங்களாக மனித வதையாக மாறி வருகிறது.

1994 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு பொறியியல் படிக்கச் சென்ற நீர்வேலியைச் சேர்ந்த ஒரு மாணவன் ''ராகிங்'' கொடுமையால் சித்த சுவாதீனமில்லாத நிலையில் வீடு திரும்பினார். மகனின் நிலையைக் கண்டு ஓய்வுபெற்ற அரச ஊழியரான தகப்பன் மனவேதனையால் உயிர் நீத்தார்.

வரப்பிரகாஷ் கொலையில் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனை மட்டும் போதாது. அவர்கள் குறித்த சகல தகவல்களையும் அவர்களின் புகைப்படங்களுடன் பிரசுரித்து சகல முன்னணி பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுக்கு அனுப்பினால் எதிர்காலத்திலாவது மாணவ சமுதாயத்துக்கு நன்மை பயக்குமென எண்ணுகின்றேன். ★

# வக்கிர எண்ணத்துடன் செய்யப்படும் மாணவர் வதை

யாழ். பல்கலைக்கழகத்தில்கலைப்பீடத்தில்இறுதி ஆண்டில் பயிலும் சிரேட்ட மாணவன் 'சனிந்தன்' ''ராகிங்'' போர்வழிகளைச் சாடுகின்றார் இங்கே:

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷ் ''ராகிங்'' என்னும் பெயரால் ''வதை'' செய்யப்பட்டு மரணமடைந்தமையையிட்டு நாம் தலை குனிகின்றோம். இது அவனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மட்டுமன்றி அவமானத்தாலும் கூட.

பல்கலைக் கழகத்திற்கு புகும் புதுமுக மாணவர்களுடன் பழகுவதற்கும் அவர்களுடன் பரஸ்பரம் அறிமுகமாவதற்காகவும் நன்னோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட 'ராகிங்' (பகிடிவதை) இன்று பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக மாறியுள்ளது.

'ராகிங்' கை எதிர்த்து சமுதாயத்தில் பலரும் குரல் கொடுத்து வருகின்ற வேளையிலும் அதனைத் தடுக்க முடியாதது ஏன்?

முதலாம் வருடத்தில் கல்வியை ஆரம்பிக்கும் போது ''ராகிங்'' கை எதிர்க்கின்ற மாணவர்கள் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் போது ''ராகிங்'' செய்வதில் தீவிரமாக உள்ளனர். முதலாம் வருடத்தில் பிழையான தேவையற்ற பகிடிவதை ஒருவருட பல்கலைக்கழகக் கல்வியைக் கற்றதன் பின்னர் சரியாகத் தெரிகின்றதா? அல்லது ''யாம் பெற்ற இன்பம் பெறுக'' என பழிதீர்க்க முனைகின்றனரா? அல்லது பல்கலைக்கழக நெறிமுறைகளைக் கற்றுக் கொண்டோம் என்பதினாலா? என்பதனை நாம் சிந்திக்க வேண்டும்.

முதலாம் வருடத்தில் கல்வி கற்கச் செல்லும் தமது பிள்ளைகளுக்கு ''ராகிங்'' நடைபெறுவதாகக் குறை கூறும் பெற்றோர்கள். இரண்டாம் வருடத்தில் அதே பெற்றோர்களின் பிள்ளைகளால் மேற்கொள்ளப்படும் பகிடிவதையை ஏன் தடுக்க முடியவில்லை?

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளால் தான், உங்கள் பிள்ளைகளுக்கு ''ராகிங்'' நடைபெறுகின்றது அதனைத் தடுப்பதில் உங்களுக்குத்தான் கூடிய பங்குண்டு, உங்கள் பிள்ளைகளை நீங்கள் திருத்தாவிட்டால் வேறுயார் திருத்துவது?

முதலாம் வருடத்தில் கல்விற்கும்போது அப்பாவிகளாக இருக்கும் மாணவர்கள் இரண்டாம் வருடத்திற்கு வந்தவுடன் தலைநாயகர்களாக மாறி பகிடிவதை செய்வது எதனால்?

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony (20×20), National (21,50) கலர் T.V. க்களும், N.V 300 டெக்கும் விற்பனைக்குண்டு. தொடர்பு: N. கிருஸ்ணா சிவன்கோவிலடி, சாவகச்சேரி. [50959]

5'×5' திரையுடன் Coloul Video Projector. Naitonar (Japan) விற்பனைக்கு உண்டு. தொடர்பு சொள்ள வேண்டிய முகவரி: யோகராசா ரமேஸ், (சங்கக்கடை வீதி), கைதடி, நுணாவில், சாவகச்சேரி, சனி – ஞாயிறு பார்வையிடலாம். [50983]

வெள்ளவத்தையில் திறம்பட நடந்துவரும் ரெக்கோடிங் பார் (Music and Recording Bar) நவீன உபகரணங்களுடனும், C D யுடனும் விற்பனைக்குண்டு. இடவசதி தேவைப்படின் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். தொடர்பு: தொலைபேசி இல. 594568 [சி/1960]

### திருமண சேவை

சகல மதத்திலும் சகல உத்தியோகத்திலும் மணமக்கள் உண்டு. பழைய தொடர்புள்ளவர்களும் எம்மை நேரில் வந்து சந்திக்கவும். தொடர்பு: தூர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [50977]

### தவறிவிட்டது

பெண்கள் கட்டும் கைக்கடிகாரம் பிரப்பங்குளம் லேனுக்கும், ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலை அல்லது இல. 347, K.K.S வீதியில் உள்ள மதுரா மாளிகையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [50980]

அரசடி விநாயகர் ஆலயம், கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த வைரமுத்து செல்வம் என்பவரது 4,71230359V இல. தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன 01.11.97 அன்று மானிப்பாயில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட ஆலயத்தில் ஒப்படைக்கவும். [50981]

### அமெரிக்க விசா

அமெரிக்காவுக்கான குலுக்கல் முறையில் இலவச விசா வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பிறைற் இன்ஸ்ரியூட், பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளியில் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்) வாங்கியோர் உடன் வந்து சந்திக்கவும். [50989]

### தேவை

திருமண சேவையில் பணி புரிவதற்குப் படித்த பெண் பிள்ளை தேவை. தொடர்பு: "தூர்க்கா திருமண சேவை" 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [50976]

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் கதைக்க எழுதப் பயில புதிய வகுப்பு ஆரம்பம். 10 மாணவர்கள் மட்டும் ஒரு வகுப்பில் அனுமதி. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (50979)

## வாழ்த்துகின்றோர்

### அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை

எதிர்வரும் 13-11-97 அன்று நடைபெறும் வெள்ளி விழாவில் ஸ்தாபகர் கௌரவிப்பு, வெள்ளி விழாமலர் வெளியீடு, பரிசளிப்பு, சமயக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் என்பன சிறப்புற வாழ்த்துகின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**சதுர்த்திகா களஞ்சியம்**

உரிமையாளர்: திரு. தி. சற்குணராஜா
இருபாலைச்சந்தி, கோப்பாய்.

(சி/1970)

## தூரிகையின் முதலாம் ஆண்டு நிறைவில் நிறுவனப் பெருமையுடன் வழங்கும் மனையியற் பொருட் கண் காட்சி

நவம்பர் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில்
காலை 9 மணி — மாலை 4 மணி வரை

**இடம்: தூரிகை,** சட்டநாதர் வீதி, நல்லூர்.

காட்சி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**கலைவாணி வீடியோ & போட்டோ**

கொடிகாமம் வீதி, கரவெட்டி. (50933)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இரத்தினசபாபதி சர்மா சங்கரிஅம்மா

உசன் கந்தசுவாமி கோயில்

முன்னாள் பிரதம குருவின் பாரியார் திருமதி இரத்தினசபாபதிசர்மாசங்கரிஅம்மா அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா முருகன் தாளடையப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தாவும்,
இந்து இளைஞர் மன்றமும், அடியார்களும்.
உசன் (50991)

## வட இலங்கைச் சங்கீத சபை
## பரீட்சைகள் 1998

வட இலங்கைச் சங்கீத சபையின் 1998 ஆம் ஆண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 1998-11-04 செவ்வாய்க்கிழமை முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை- அறிவுறுத்தல் பிரதியுடன்-ரூபா 20.00.

விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்பும் தேர்வுநாடிகள் ரூபா 20.00 பெறுமதியான காசுக் கட்டளை (Money Order) யுடன் ரூபா 2.50 பெறுமதியான தபாற்தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்டநீள் (10 Cm. x 22 Cm.) கடித உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

தேர்வுநாடி ஒருவர் ஒருபடிவத்தில்ஒரு பாடத்திற்குமட்டுமேவிண்ணப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பக் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடத்திற்கோ ஒன்றுக்கு மேற்பட்டதரத்திற்கோ ஒரே படிவத்தில் விண்ணப்பித்தால் அத்தகைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அஞ்சற் கட்டளைகள் வட இலங்கைச் சங்கீத சபை (North Ceylon Oriental Music Society) என்ற பெயரில் பெறப்பட்டு யாழ்ப்பாணம் (Jaffna) தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அமைதல் வேண்டும்.

**சு. இரத்தினராசா**
கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் 1,
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.

North Ceylon Oriental
Music Society,
Dept. of Education,
Chemmany Road,
Jaffna. 40000.

[1879]

## நெல் விதைப்பு மும்முரம்

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் நெல்விதைப்பு மும்முரமாக நடைபெறுகிறது.

தென்மராட்சி மாசேரி, வரணிப் பகுதியில் இருந்து கட்டாக்காலிகள் இப்பகுதிக்கு வருவதாக கமக்காரர் அமைப்பிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-36)

## முதலாம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 07 – 11 – 1940
மறைவு: 06 – 11 – 1996

### வேலுப்பிள்ளை திரவியம் ஜோர்ஜ்

கருணை நிறைந்த தேவனே! உமது அடியாரான இவரின் குற்றங் குறைகளை மன்னித்து வான் வீட்டில் இவரை ஏற்று நித்திய சாந்தியைக் கொடுத்தருளும்,

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை, (50998)

## கிறிஸ்தவக் கருத்தரங்கு

எதிர்வரும் 07-11-97 வெள்ளிக்கிழமையும் 08-11-97 சனிக்கிழமையும், இலக்கம் 136, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விசுவாசிகள் சபையில் ஒரு விசேடித்த ஆவிக்குரிய வேதப்பாட வகுப்புகள் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை நடைபெறும்.

**அருட்திரு. லால் வண்டர்வல்**
(National Director, Gospel for Asia, SriLanka)

**அருட்திரு. G. J. கிளரண்டன்**
(Pastor in Change, Believer's Church SriLanke)

இவர்கள் தேவசெய்தியை வழங்குவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சபை நிர்வாகம்

இல. 136, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (50988)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 04 – 01 – 1937
விண்ணில்: 20 – 10 – 1996

### திருமதி உருத்திராபதி பூரணரெத்தினம் (தங்கக்கிளி)

திதி: 07–11–1997

ஈர் 21 ஆண்டுகளாய் இல்லறம் ஆண்டாய்
ஈர் நான்கு பிள்ளைகளைப் பெற்று வளர்த்தாய்
ஈர் மூன்று பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தாய்
ஈர்பத்து ஒக்ரோபர் திங்கள் 1996 இல் இறையடி எய்தினாயே!

நாளை 7-11-1997 வெள்ளிக்கிழமை எமது வீட்டில் நடக்கும் சமய நிகழ்ச்சிகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு இல்லை.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சில்லாலை,
வல்வெட்டித்துறை, (50630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இதுதான் நீதியா?

பெற்றோர்கள் யாழ்ப்பாணத்தில், அவர்களது மகன் டென்மார்க்கில். பெற்றோரும் பிள்ளையும் கடந்த பதினேழு வருடங்களாக ஒருவரை மற்றவர் சந்திக்க முடியவில்லை; பாசத்துடன் பார்த்துப் பேச முடியவில்லை.

இரு தரப்பாரும் இருக்கும் இடங்களுக்கு இடையிலான தூரம் மட்டும் பெற்றோர்—மகன் சந்திப்புக்குத் தடையாக இருக்கவில்லை. இலங்கையின் அரசியல் சூழ்நிலையும் குறிப்பாகப் போரும் பிள்ளை முகம் காணாது பெற்றோர் வாடியதற்குக் காரணங்கள்.

யாழ்ப்பாணத்தில் இப்போது நிலைமை திருந்தி விட்டது அமைதி திரும்பி விட்டது என்ற பிரசாரம் சம்பந்தப்பட்ட மகனையும் ஈர்த்தது.

நீண்டகாலமாகப் பெற்றோரைப் பார்ப்பதற்குத் துடித்துக் கொண்டிருந்த மகன், தாய் தந்தையரை அவர்களின் தள்ளாத வயதிலாவது பார்த்துக் கதைத்துப் பாசத்தைப் பரிமாறிக் கொள்ள விரும்பினார்.

டென்மார்க்கில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் விரைந்த வேகத்தில் யாழ்ப்பாணம் வந்து விடலாம் என்று அவர் நினைத்திருப்பார். ஆனால் இப்போது டென்மார்க் பிரசையாகிவிட்ட அவரின் எண்ணம் கனவாகியது.

யாழ்ப்பாணம் வரமுடியாமற் போனது என்பது ஒரு புறமிருக்க, கைது, பொலீஸ் நிலையம், நீதிமன்றம் என்று ஏறி இறங்க நேரிட்டது. மனதில் சுமந்து வந்த கனவுகள் கருகிப் போன நிலையில் யாழ்ப்பாணம் வராமலே — தன்னைப் பெற்றுப் பேணி வளர்த்த பெற்றோர் என்ற தெய்வங்களைத் தரிசிக்க முடியாமலேயே — கனத்துக் கறுத்த மனதோடு திரும்பிவிட்டார்.

தமிழர்கள், இலங்கையின் எந்த மூலை முடுக்கில் வாழ்ந்தாலும், என்ன பதவி வகித்தாலும், எந்த மட்டத்தினராக இருந்தாலும் அவர்கள் சந்தேகத்துக்கு உரியவர்களாகவே பார்க்கப்படுகிறார்கள்!

பாதுகாப்புக் காரணம் என்ற முத்திரையைப் பயன்படுத்தி இந்த நாட்டில் தமிழர்களின் வாழ்க்கை உரிமைகள் பறிக்கப்படுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல.

குடும்ப உறவுகளைப் பேணுதல் மக்களுக்கு உரித்தான, பறிக்க முடியாத அடிப்படை மனித உரிமை. மனிதனின் வாழும் உரிமைக்குள் அடங்குவது.

தமிழர்கள் அந்த உரிமைகளுக்கு அருகதை அற்றவர்கள் ஆக்கப்பட்டுள்ளமை மேற்கூறியதுபோன்ற நிகழ்வுகள் மூலம் வெளிப்படையாகிறது. உள்நாட்டில் வாழும் தமிழர்களிடம் இருந்து மட்டுமன்றி, வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழர்களின் உரிமையும் பாதுகாப்புக் காரணம் என்ற முத்திரை குத்திப் பறிக்கப்படுகின்றது.

குடும்ப உறவுகளைப் பேணுதல், புதுப்பித்தல் என்பன ஆகக் குறைந்தது மனிதாபிமான நோக்குடன், மனித நேயத்துடன் அணுகப்பட வேண்டியவை. தமிழர்களைப் பொறுத்தவரை அது தானும் இல்லை.

இந்த நடைமுறைகள், போக்குகள் தமிழர்கள் இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரசைகள் என்ற நிலையையே நிறுத்துகின்றன, ஊர்ஜிதம் செய்கின்றன.

இந்தப் பாதகமான நிலையை நீக்க நடவடிக்கை எடுக்காமல் தமிழர்களுக்குச் சமஉரிமை வழங்கப்படுவதாகக் கூறப்படுவதில் என்ன பயன்?

# 90 வீதமான விமானத் தாக்குதல்கள் பொதுமக்களின் உடைமைகள் மீதே!

## புளொட் உபதலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 6

''வடக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்குகள் என்று தெரிவித்து நடத்தப்படும் தாக்குதல்களில் 90 சத வீதமான தாக்குதல்கள் பொதுமக்களின் உடைமைகள் மீதே நடத்தப்படுகின்றன''

புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்கவிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தளபதியைச் சந்தித்து பல தரப்பட்ட விடயங்கள் குறித்து மாணிக்கதாஸன் பேசினார்.

''விடுதலைப் புலிகள் அமைப்பின் அலுவலகம், முகாம் என்று இலக்குவைத்து அதற்கு அருகில்உள்ள பொது மக்களின்வீடுகள் மீதேகுண்டு வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இது தமிழ் மக்களின் உடைமைகளை அழிக்கும் செயலே'' என்று மாணிக்கதாஸன் எடுத்துக் கூறினார்.

''விமானத்தில் உள்ள எலக்ரோனிக் கருவிகளின் தவறுகளே இந்த நிலைக்குக் காரணம். இனிமேல் இந்தத் தவறு ஏற்படாமல் தடுக்கப்படும் என்று மாணிக்கதாஸனிடம் விமானப்படைத் தளபதி உறுதி கூறியதாக ''புளொட்'' அமைப்பின் செய்திக்குறிப்பு தெரிவித்தது.

''பருத்தித்துறை கடற் பகுதியில் அதிகாலை 4 மணி முதல் காலை 7 மணி வரையிலே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகின்றது. காலை 7 மணிக்கு பின்னர் விமானங்கள் அப் பகுதியூடாகப் பறப்பதற்கு வசதியாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்தடையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று மாணிக்கதாஸன் கோரிக்கை விடுத்தார்.

இந்த தடையை நீக்க முடியாது. இந்த நேரத்தை முன் நோக்கி அதாவது அதிகாலை 4 மணிக்கு முன்பே நீடிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று விமானப் படைத் தளபதி பதில் அளித்தார்.

'இந்த விடயம் தொடர்பாக பருத்தித்துறை இராணுவ அதிகாரியுடன் விரைவில் பேச்சு நடத்தப்படும்.

அந்தப் பேச்சில் இந்த விடயத்துக்கு இணக்கம் காணப்படும்' என்று மாணிக்கதாஸன் தெரிவித்தார். (இ-3)

## மோசமான வீதி

நெல்லியடியிலிருந்து வதிரிச் சந்தி ஊடாகத் திக்கம் செல்லும் வீதியில், நெல்லியடிக்கும் வதிரிக்கும் இடையில் உள்ள மகாவித்தியாலய வீதி மோசமாகப் பழுதடைந்து உள்ளது.

இவ்வீதியைத் திருத்துவதற்கெனப் பறிக்கப்பட்ட கற்குவியல்கள் ஓரமாகப் போடப்படாது வீதியில் குவிக்கப்பட்டுள்ளன இ-173)

## கடல் அரிப்பால் மயானம் பாதிப்பு

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதியிலுள்ள திக்கம் மயானம் கடலரிப்பு அபாயத்தை எதிர்நோக்கி வருகிறது.

மயானத்தின் பெரும் பகுதி கடலரிப்புக்குள்ளாகியதால் சடலங்களை தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ-173)

# பனைமரம் முறிந்து வீழ்ந்து தாத்தாவும் பேரனும் மரணம்!

## நுணாவிலில் பரிதாப சம்பவம்

தென்மராட்சி, நவ. 6

பலத்த காற்றினால் பனைமரம் ஒன்று திடீரென முறிந்து வீழ்ந்ததில் வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த வயோதிபர் ஒருவரும் அவரது பேரனான சிறுவனும் அதற்குள் நசியுண்டனர். வயோதிபர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சிறுவன் பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானான்.

நுணாவில் ஏற்றத்தடியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வல்லி கனகன் (வயது 72) அவரது பேரனான தேவராசா ஜெகன் (வயது 13) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

மழை பெய்து கொண்டிருந்ததால் ஒரே குடையைப் பிடித்தவாறு இவர்கள் இருவரும் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றது.

சாவகச்சேரி திடீர்மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் மரண விசாரணை நடத்தி விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்தார். (ஐ-117)

# வீதிகளைத் திருத்த ரோலரும், தாரும்

யாழ்ப்பாணம், நவ. 6

வடமாகாணத்தில் உள்ள வீதிகளைத் துரிதமாக செப்பனிட வசதியாக றோலர் ஒன்றும், 2500 பரல் தாரும்இங்கு எடுத்து வரப்படவிருக்கின்றன.

வீதி, அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இவை வந்து சேர்ந்ததும், பழுதடைந்த வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் திருத்தப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# நெல் நடுகைக்கு முன் யூரியா விநியோகம்

வலிகாமம் தெற்கு, நவ. 6

பெரும்போக நெல் நடுகைப் பருவகாலத்துக்கு முன்னர் விவசாயிகளுக்கு தேவையான உரம் வழங்கப்பட இருப்பதாக உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து விவசாயத் திணைக்களத்தினரால் தருவிக்கப்பட உள்ள யூரியா உரம் கமநல கேந்திர நிலையங்களால், விவசாய சம்மேளனங்களினூடாக தேவையான நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

நெற் செய்கை செய்யப்பட்ட ஒவ்வொரு ஏக்கருக்கும் அரை அந்தர் யூரியா உரம் வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அடுத்து வரும் கிழமைகளில் இலவச மண்வெட்டிகள் வழங்கப்பட இருப்பதாகவும் தற்போது உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் விவசாயிகள் தமக்குத் தேவையான அளவுகளை கொல்லி, பீடைக் கொல்லி நாசனிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வக்கிர எண்ணத்துடன்.....

(ஐந்தாம் பக்கத் தொடர்)

உயர்கல்வியைக்கற்கக் கற்க வக்கிர புத்திமேலோங்குகிறதா? அவ்வாறாயின் அந்தக் கல்வியே தேவையற்றதல்லவா?

பகிடிவதையால் இன்னலுறும் மாணவர்கள் அதனை பல்கலைக் கழக அதிகாரிகளுக்கு துணிந்து எழுத்து மூலம் அல்லது நேரடியாக முறையிட்டால் அதற்கான தண்டனை ''ராகிங்''கில் ஈடுபட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு இருந்த போதிலும் இன்னலுறும் மாணவர்கள் ஏன் முறையிடுவதில்லை? அப்படியாயின் இம்மாணவர்கள் பகிடிவதையை ஏற்றுக் கொள்கின்றார்களா?

வக்கிரத்துடன் ''ராகிங்''கில் ஈடுபட்ட மாணவன் பற்றிய உண்மையான முறைப்பாட்டை பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.

### பிறர் துன்பத்தில் இன்பம்

பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களில் ஒருசில வக்கிர புத்தியுடைய மாணவர்களால் தனிப்பட்ட விரோதத்தினை தீர்க்க மேற்கொள்ளப்படும் வதைகள் முழு பல்கலைக்கழக சமுதாயத்தையுமே தலை குனிய வைத்துள்ளது.

மற்றவர்களுக்கு துன்பம் செய்து இன்பம் காணும் ஒரு மாணவன் நாளை சமுதாயத்திற்கு நன்மை செய்வான் என்று நிச்சயமாக நம்ப முடியாது. ஆகவே வக்கிர புத்தியுடன் நடந்து கொள்ளும் ஒவ்வொரு மாணவனும் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டியவனே! இது ஏனையவர்களுக்கு நல்லதொரு பாடமாக அமையும். இவ்விடயத்தில் பல்கலைக்கழக அதிகாரிகளும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

இன்று தமிழர்கள் பல்வேறு வகையான இன்னல்களுக்கும் ஆளாகிக் கொண்டு இருக்கின்ற வேளையிலும் பேராதனை, மட்டக்களப்பு, வவுனியா முதலிய இடங்களில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் மும்முரமாக வதைகளில் ஈடுபடுபவர்களும் தமிழர்களே என்று அறிகின்ற போது மனம் புழுங்காமல் இருக்க முடியவில்லை.

எனவே வக்கிர எண்ணத்துடன் வதைகளில் ஈடுபடும் மாணவர்கள் திருந்த வேண்டும். வதைகளில் ஈடுபடுவதில்லை என உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் ராகிங் வதை தடுக்க முடியும். ★

## சமய சந்நிதியில்

வேலணைத் துறையூர் பூரணை—புட்கலை சமேத அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோயிலில் வழமை போல் இவ்வருடமும் கந்தசஷ்டி விழா கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தொடர்ந்து தினசரி கந்த புராணப்படிப்பு நடைபெற்று வந்தது. நாளை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை கந்தபுராணப்படிப்பு முடிவுற்றதும், சூரசங்கார உற்சவம் இடம்பெறும்.

★ ★ ★

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவ சூரன் போர் இன்று வியாழன் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

திருக்கல்யாண உற்சவம் வெள்ளிக்கிழமை இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ-117)

★ ★ ★

தென் புலோலி அருள் மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் சூரன்போர்விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (இ-109)

## நாளை

**ஐப்பசி 21**

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி பிற்பகல் 1.30 வரை.

நட்சத்திரம்: திருவோணம் பின் இரவு 3.58 வரை.

கோஷ்டாஷ்டமி

சுபநேரம்: 6.05–7.35

ராகுகாலம்: 10.35–12.05

(பகலுக்கும் இரவுக்கும் வழமை நேரப்படி)

## சாயி சிந்தனை

நீ பார்த்துப் பழகும் ஒவ்வொருவரிலும் இறைவனைக் காண்பாயாக. உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளிலும் இறைவனைக் கண்டுகொள். அவனுடைய மறை சக்தி எல்லா ஜடப்பொருளிலும் பிறவற்றிலும் நிறைந்துள்ளது. உண்மையைச் சொன்னால் ஜடம் என்பது இல்லை. எல்லாம் இறைவனே. அவனுடைய மறைசக்தியின் விளக்கமே.

உன்னுள்ளும் புறமும் ஊற்றெடுக்கும் ஆனந்தத்தில் திளைப்பாயாக. ஆத்மீக மார்க்கத்தில் தொடர்ந்து செல். தரித்து நிற்காதே. பின்வாங்கவும் வேண்டாம். முன்னோக்கி அடிவைப்பதிலேயே நகரும் ஒவ்வொரு கணமும் செல்லட்டும். அனைத்திலும் இறைவனைக் காண்பதற்கு அந்தஒவ்வொரு கணமும் கிடைத்துள்ளதென மகிழ்ச்சிகொள். இறைவனின் பெருமையை இசைத்துப் பாடவும், அவன் லீலைகளைச் செவியுறவும், அவன் சந்நிதானத்தின் மகிமையைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை முழு மனத்துடன் வரவேற்பாய்.

இறைவன் படைப்பனைத்திலும் அவன் கைவண்ணம் தெரிகிறது. எல்லாத் திக்குகளிலும் அவன் பாதம் பரந்துள்ளது. அவன் திருப்பார்வை எல்லா எல்லைகளையும் கடக்கின்றது.

ஒவ்வொரு முகத்திலும் அவன் திருவதனம் பொலிகின்றது. பகவத் கீதை விளம்புவது இதுவே. கீதையைப் படிக்கும் நீங்கள் இந்த மெய்த் தரிசனத்தை உறுதிப்படுத்த முடியும். அப்படிச் செய்வதற்கு அதில் விசுவாசம் வேண்டும்; அதன் ஒளியிலே வாழ்க்கையை நடத்தவேண்டும்.

ஆதாரம்:
Sathya Sai Speaks Vol VII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)
செய்யப்பட்டது.

அதிகாரப்பரவலாக்கல் யோசனை தொடர்பாக ஐ. தே. க. வுக்குள் தோன்றியுள்ள கருத்து முரண்பாடுகள் குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அதிகாரப்பரவலாக்கல் யோசனையில் உள்ள சட்ட விவகாரங்கள் குறித்து ஆராய ஒரு குழுவும் —

தெரிவுக்குழுவில் இணக்கம் காணப்படாத விடயங்களை ஆராய மற்றுமொரு குழுவும் — நியமிக்கப்பட்டுள்ளன.

(இ-21-3)

## தமிழ்..

(முதலாம் பக்கத் தொடர்)
வித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தற்சமயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசமைப்பு சீர்திருத்தங்கள் சட்டமாக்கப்பட்டால் முதலாவது நடவடிக்கையாக சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறும். சுமார் 6 மாத காலத்தில் இது நிறைவேறும் என எதிர்பார்க்கிறோம்.

மொத்த செலவீனத்தில் 27 சதவீதத்தையும், நிசர தேசிய உற்பத்தியில் 7 சதவீதத்தையும் யுத்தம் உறிஞ்சுகிறது என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் அரசமைப்பு யோசனைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இணங்கினால், அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று ஜனாதிபதி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-21-3)

வடமராட்சியில்
SPOKEN ENGLISH
திரு. BRITTO
ஆரம்பம்:
07 - 11 - 97
வெள்ளி 1. 30 3. 30
கலைக் கல்லூரி
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
(50990)

வவுனியா

# கல்வியியல் கல்லூரியில் 'ராகிங்' இனி இடம் பெறாது

''எதிர்வரும் காலங்களில் வவுனியா கல்வியியல் கல்லூரியில் 'ராகிங்' நடவடிக்கையில் ஈடுவடுவதில்லை''

மேற்கண்டவாறு வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்கள் முடிவு செய்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும்—

ராகிங் கொடுமையைக் கண்டிக்கும் கண்டனக் கூட்டமும் — நேற்று மாலை வவுனியா கல்வியியற் கல்லூரியில் நடந்த சமயம் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். அழகரத்தினம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் பங்கு பற்றினர்.

'ராகிங்' கொடுமையைப் பகிரங்கமாகக் கண்டிப்பது என்றும்—

வரப்பிரகாஷின் மரணத்தால் வருந்தும் அவரது பெற்றோருக்கு அனுதாபம் தெரிவிப்பது என்றும்—தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கல்லூரி மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து விரிவுரைகளில் நேற்றுக் கலந்து கொண்டனர். (இ-3)

# காலி நீதிமன்றில் குண்டுவெடிப்பு

கொழும்பு, நவ. 6

காலி நீதிமன்றத்தில் நேற்றுக் காலை 10.20 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் 7 பேர் காயமடைந்தனர்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் முடிவடைந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்த சமயமே குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு குழுவினருக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்துவந்த பகைமையே இக்குண்டு வெடிப்புக்குக் காரணமாக இருக்கலாம் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (இ-3)

## படை-புலிகள் மோதல்

'வெற்றிஉறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் பாதுகாப்பு நிலைகள் மீது நேற்று முன்தினமிரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். 11 பேர் காயமடைந்தனர்.

புலிகள் தரப்பில் 6 பேர் இறந்ததாக பாதுகாப்புத் தரப்பு தெரிவித்தது. (இ-21)

## கோப்பாயில் மிதிவெடி

கோப்பாய்ப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் ஒருவர் இடது காலை இழந்தார்.

குரும்பசிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் மத்தியில் வசித்துவந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான அபிவாசம் தேவகுமார் (45 வயது) என்பவரே மிதிவெடியில் சிக்கி இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தவராவார். யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3)

## வரப்பிரகாஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)
மட்ட ஒழுங்காற்று குழு கூட்டத்தால் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

ஒழுங்காற்று குழு சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது விதிக்கப்பட வேண்டிய தண்டனை குறித்து தீர்மானம் எடுக்கும்.

அதேநேரம் விளக்கமறியலிலுள்ள மாணவர்களை விசாரணை செய்வதற்கான அனுமதியை மேல் நீதிமன்றத்திடம் மனுச்செய்து பெறுவதற்கான நடவடிக்கைகளை விசாரணைக்குழு எடுப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

## அரச ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்)
சரும், பிரதிநிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி எல். பீரிஸ் நேற்று சமர்ப்பித்த வரவு—செலவுத் திட்டத்தில் மேற்கண்ட யோசனைகள் இடம்பெற்றுள்ளன.

அமைச்சர் பீரிஸ் நேற்று நண்பகல் 2.30 மணி முதல் இரவு 8 மணிவரை தமது வரவு — செலவுத் திட்ட உரையை நிகழ்த்தினார்.

அத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட மற்றும் முக்கிய சில யோசனைகள் வருமாறு:-

★ அரசாங்க ஊழியர்கள் பெறும் பல்வகைக் கடன்கள், முற்பணங்கள் என்பவற்றின் மீதான வட்டி வீதம் 4 2 சதவீதமாக இவ்வருடம் டிசம்பர் மாதம் தொடக்கம் குறைக்கப்படும். முன்னர் இந்த வட்டி வீதம் 7.2 சதவீதமாக அமைந்திருந்தது.

★ தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் 28 நீர் விநியோகத் திட்டங்களை விருத்தி செய்வதற்காக அரசு 50 கோடி ரூபாவைச் செலவிடும்.

★ தனியார் துறையினர் 40 இற்கும் கூடுதலான ஆசனங்களைக் கொண்ட 'பஸ்களைத் தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

★ அரச தனியார் துறை ஸ்தாபனங்கள் தமது ஊழியர்களுக்குப் போக்குவரத்து சேவையை நடத்துவதற்கும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சொந்த விருப்பு அடிப்படையில் தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பதாகவே ஓய்வுபெற விரும்பும் ஊழியர்களுக்கு என்று தொழில் ஆணையாளரின் அங்கிகாரத்துடன் அமுல் செய்யப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கொடுப்பனவுகள் மீது வரி செலுத்த வேண்டியதில்லை. இந்த வரி ஒழிப்பு உடனடியாக அமுலுக்கு வருகின்றது.

★ உள்ளூர்ச் சொத்துக்களை அபிவிருத்தி செய்பவர்கள் பாரிய அளவில் வீட்டுத் தொகுதிகளை அமைப்பதற்கு ஊழியர் நம்பிக்கை நிதியம் மூலம் பணம் வழங்கப்படும். ஆகக் குறைந்த முதலீடாக 5 கோடி ரூபா வழங்கப்படும். ஒவ்வொரு கட்டடத் தொகுதியிலும் 50 சத வீதமான வீடுகள் நம்பிக்கை நிதிய ஊழியர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

★ வீடுகளைக் கொள்வனவு செய்வது, விற்பது, அடைமானம் வைப்பது என்பன சம்பந்தமாக முத்திரை வரி ஒவ்வொரு ஆயிரம் ரூபாவுக்கும் ஒரு ரூபா என்ற விகிதத்தில் குறைக்கப்படுகின்றது.

★ சேமநல நிதியத்தின் வருடாந்த அங்கத்துவக் கொடுப்பனவில் இருந்து 10 சதவீதம் அரசாங்க அடமான முதலீட்டு வங்கிகள் மூலம் வீடமைப்புக் கடன் வழங்க ஒதுக்கப்படல் வேண்டும்.

★ சமுர்த்தி நன்மை பெறுவோர் முச்சக்கர வண்டிகள், இரண்டு சக்கர இழுவைஇயந்திரங்கள், மீன்பிடிப்படகுகள், நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவற்றை இலகு நிபந்தனைகளுடன் மக்கள் குத்தகைக் கம்பனிகள் மூலம் பெறுவதற்கு வசதிகள் செய்யப்படும். அமைச்சர் இதற்கென 30 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். அரச பொது வசதி அபிவிருத்தித் திட்டங்களுக்கென மேலதிகமாக 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ வங்கி நிதி ஸ்தாபனங்கள் மீதான மொத்த விற்பனவு வரி ஒரு சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டுள்ளது

★ கலால் விசேட ஏற்பாட்டுச் சட்டத்தின் கீழ் கலால் வரி விதிப்பு சிகரெட், மதுபானம், மோட்டார் வாகனங்கள், குறிப்பிட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருள்கள் ஆகியனவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

★ தோட்டத் தொழில் துறை சாராத விவசாய உற்பத்தியில் முதலீடு செய்பவர்களுக்கு 10 வருட வரி விலக்களிக்கப்படுகின்றது. உயர்ந்த ரக விதைகள் மற்றும் விதை உற்பத்திகளை வர்த்தக ரீதியாக மேற்கொள்வதற்கான ஆய்வுகளுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுகின்றது. (இ-3-9)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்)
கிக் கூறியது.

இதேநேரம்—புறூண்லாண்டுக்கு நேற்றிரவு ஏற்பாடு செய்த விருந்துபசாரத்தில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான நீலன் திருச்செல்வம், ஈ. பி. டி. பீ. செயலாளர் நாயகமும், எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா, முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகரும், பிரதி அமைச்சருமான ஹில்புல்லா ஆகியோரி கலந்துகொண்டனர். (இ-3)



நாடக அரங்கக் கல்லூரி

கருத்தரங்குத் தொடர் - 6

நடிப்பில் சொல்சாராத் தொடர்பாடல்

குழந்தை
ம. சண்முகலிங்கம்

08 - 11 - 97 சனி 3-30 மணி

யா/ கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்

ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- இயக்குநர்

(சி/1973)

திறப்பு விழா



ரவி எலெக்ரோனிக்ஸ்

இன்று (06-11-97) வியாழக்கிழமை
காலை 6-30 மணி முதல் 9-30 மணி வரையுள்ள சுபவேளையில்
சாவகச்சேரி, கண்டி வீதி, இல. 100 இல்
அமைந்துள்ள இந்த ஸ்தாபனம்

சாவகச்சேரி சந்தை
குமார் விற்பனை நிலைய அதிபர்
அருளம்பலம் தேவகுமார்
அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

தொலைக்காட்சிப் பெட்டிகள்,
டெக்குகள்,
வானொலிப் பெட்டிகள்,
அவற்றுக்கான உபகரணங்கள்
அனைத்தும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:



ரவி எலெக்ரோனிக்ஸ்
இல. 100, கண்டி வீதி, சாவகச்சேரி.

வீடியோ, ஓடியோ துறையில் யாழ். நகரில் முன்னோடி நிறுவனமான
ஷண் றெக்கோடிங் ஸ்தாபனத்தின்
பாடல் கசெற்றுகள் விற்பனையாளர்களும், வீடியோ நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்பவர்களும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
(சி/1972)

கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ஆ. சிவபாலன்
அவர்களின் தாயார்

திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை

அவர்கள் சிவபதம் அடைந்த செய்திகேட்டு துயருறும் அவரின் குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்,
சிந்து மருந்தகம்

[51005]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 - 11 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org